www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்:

## தமிழ்

நேரம்: 3.00 மணி

பகுதி - I

மதிப்பெண்கள்: 90

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

பலவுள் தெரிக. 14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின

3. தமிழில் திணைப்பாகுபாடு _______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட் குறிப்பு ஆ) சொற் குறிப்பு இ) தொடர்க் குறிப்பு ஈ) எழுத்துக் குறிப்பு

4. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்பமாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்

5. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

6. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை _______.
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

7. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

8. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

9. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

10. படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. பொருத்துக.

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1) மாவலிபுரச் செலவு
ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2) கல்கோட்டரி
இ) பல்லாவரம் - 3) அருங்காட்சியகம்
ஈ) எழும்பூர் - 4) கூவம்

அ) 1,2,4,3 ஆ) 4,2,1,3 இ) 4,1,2,3 ஈ) 2,4,3,1

12. உலகப் புவி நாள் ______.

அ) ஏப்ரல் 21 ஆ) ஏப்ரல் 22 இ) ஜூன் 26 ஈ) ஜூலை 21

13. "மோட்டார் வாகனச் சட்டம்" இயற்றப்பட்ட ஆண்டு

அ) 2016 ஆ) 2018 இ) 2017 ஈ) 2019

14. உரிமைத்தாகம் கதையின் ஆசிரியர்

அ) உத்தமசோழன் ஆ) பூமணி இ) தோப்பில் முகமது மீரான் ஈ) சாந்தாதத்

## பகுதி - II

### பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
17. மறக்கக்கூடாதது, மறக்கக்கூடியது எவற்றை?
18. கலி விழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

### பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) தாமரை இலை நீர் போல ஆ) அச்சாணி இல்லாத தேர் போல

23. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.
ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) பூம்பாவாய் ஆ) வெங்கதிர்

25. இலக்கணக்குறிப்பு தருக.

அ) முத்து முத்தாய் ஆ) வளைஇ

26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) விளங்கி ஆ) பேசுவார்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

ஆ) நாம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

28. கலைச்சொல் தருக.

அ) VISA ஆ) PASSPORT

29. மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

விலை, விளை, விழை

30. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் - இவற்றின் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

## பகுதி - III

### பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32. "வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்குக.

34. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.

38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### பிரிவு - 3

குறிப்பு : எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. நிரல்நிறை அணி *(அல்லது)* உவமை அணி

40. *இலக்கிய நயம் பாராட்டுக :*

(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது ;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா! *- பாரதியார்*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) யானைக்கும் அடி சறுக்கும் (அல்லது)
ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்
42. வெண்பாவிற்குரிய பொது இலக்கணம் யாது?
43. தமிழாக்கம் தருக.
1) Learning is a treasure that will follow its owner every here.
2) A new language is a new life.
3) If you want people to understand you, speak their language.
4) Knowledge of language is the doorway to wisdom.

## பகுதி - IV

3 x 6 = 18

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

(அல்லது)

ஆ) செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறைவாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு?

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் .......... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி - V

4 + 2 = 6

குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.

47. அ) ஓங்கலிடை வந்து - எனத்தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'நன்று' என முடியும் குறள் எழுதுக.

******